

கரவெட்டி மேற்கு கரவெட்டியை சேர்ந்த

# அமரர்
# திருமதி – சாவித்திரி கந்தப்பு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20.01.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாவட்டம் வடமராட்சி கரவெட்டி மத்தியைப்
பிறப்பிடமாகவும்
கரவெட்டி மேற்கினை வசிப்பிடமாகவும்
கொண்ட

# அமரர்
# சாவித்திரிதேவி கந்தப்பு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20.01.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து

அன்போடும் பண்போடும்

பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து

எம்மை நல்வழி நடாத்தி

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

எமது அன்பு தெய்வத்தின்

மலரடிகளில் காணிக்கையாக

இவ் வழிபாட்டு மஞ்சரியினை

சமர்ப்பிக்கின்றோம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பு
03
.
06
.
1938

இறப்பு
21
.
12
.
2015



# அமரர்
# சாவித்திரிதேவி கந்தப்பு

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன்மத ஆனமதி மார்கழித் திங்கள் தனில்
மாண்பு மிகு கற்பரசி கந்தப்பு சாவித்திரி மங்கை
மாண்ட திதி பூர்வ பக்கத்து துவாதசியில்
வேண்டியே ஈசன் [illegible] அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்.

### தேவாரம்

தேவாரந்த தேவனை தேவரெல்லாம்
திருவடி மேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்ற
காவார்ந்த பொழிற்சோலை காணப்பேராய்
களுக் குன்றத் துச்சியால் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

தாயினே நிரங்குந் தலைவரே என்றும்
தமியனேன் துணைவரோ என்றும்
நாயினே னிருந்து புலம்பினா லிரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கவர
வளரிளஞ் சோலைமாந் தளிர் செந்
தீயினே ரரும்பு பெரும்பற்றப் புலியூர்ந்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்ற முற்றும்
எமக்கமுதா மெம்பிரா னென்றென்றுமே
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடி
யாரடி நாயகன் செப்புறை
அந்தமிலானந்தச் சேர்ந்த னெனைப் புகுந்
தாண்டு கொண்டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
யென்று பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

தண்ணளி வெண்குடை வேந்தன் செயல்கண்டு தரியாது
மன்னவர் கண்மழைபொழிந்தார் வானவர் பூமழை சொரிந்தார்
அண்ணவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழநின்றர் வீதி விடங்கப் பெருமான்.

## திருப்புகழ்

எதிரிலாத பக்தி தனை மேவி
இனியதாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகப் பெருமான்
## அருளிய சிவபுராணம்

**தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகமென்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க! நாதன் தான்வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
எகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!
ஈசன் அடியேற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!
ஆராத அன்பம் அருறும் மலைபோற்றி!
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுவதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலால் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்இறந்து எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல் ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்!
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைபாகா! வேதங்கள்
ஐயா, என ஓங்கி ஆழந்து இகன்ற நுண்ணியனே!
வெய்யாய், தனியாய், இயமானனாம் விமலா!
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெஞ்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அளவு இறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்!
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்!
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறும்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம்! பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்இருளே! தோன்றாய் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்காரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா அமுதே! உடையனே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றேன் எம் ஐயா! அரனே! ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்.
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
செல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வா சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உலகெல்லாம் உணர்ந்து ஓதுதர்க்கு
அரியவன் நிலவுலாவியன்
நீர்மலிவேணியன் அலகில்
ஜோதியன் அம்பலத்தில் ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

**சுபம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

**துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சில்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்**
**நிஷ்டையுங் கைகூடும், நிமலரருள் கந்தர்**
**சஷ்டி கவசம் தனை**
**அமர ரிடர்தீர அமரம் புரிந்த**
**குமரனடி நெஞ்சே குறி**

நூல்

சஷ்டியை நோக்கச் சரஹண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரஹண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஹறண பவச ரிரிரிரி ரிரிரி
விணப வசரஹறண வீரா நமோ நம
நிபவ சரஹறண நிறநிற நிறென
வசர ஹறணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
நிலைபெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகெண
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத்திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகளிரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகளவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே கலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்ளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்ட டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதின்ற் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிறங்கு
குடைச்சல சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் கடுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவஜம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பு துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றென்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கத் துலங்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரொட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண்ண வாகச்
சூரபத் மாவைத் துணித்த அதனால்
இருபத் தேழ்வர்க் குஉவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்த தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனாபதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரஹண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி ஒழுங்கு முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் முறை

## *வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்கான மூல காரணங்கள்*

01. வீதிப்போக்குவரத்து விதிகளைச் சாரதிகளும், தெருக்களை உபயோகிப்பவர்களும் சரியாக அனுசரியாமை.

02. கவனயீனமாக வாகனங்களைச் செலுத்துதல் / குழப்பமான மனநிலை.

03. அதிவேகத்துடன் வாகனங்களைச் செலுத்துதல்.

04. தெருக்களிற் செல்வதற்குத் தகுதியற்ற வாகனங்களின் பாவனை.

***வீதியில் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையிற் பாதுகாப்பாக வாகனங்களை செலுத்துவதற்குச் சாரதிகள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கவேண்டியவைகள்.***

01. விபத்துக்கள் ஏற்படக் கூடும் என உணரப்படும் இடங்களில் முன்னெச்சரிக்கையுடன் அவதானமாக உரிய முறையில் வாகனங்களைச் செலுத்துதல்.

02. பாதுகாப்பான இடைவெளியில் வாகனங்களைச் செலுத்துதல்.

03. இயலுமானவரை தனது வாகனம் செலுத்தும் ஒழுங்கைச் சரியாகப் பேணல்.

04. பாதுகாப்பான முந்திச் செல்லும் முறை.

05. இதற்குமுன்னர் தான் பல ஆண்டுகாலம் எந்தவொரு விபத்தையும் சந்திக்கவில்லை என்ற மனோநிலையில், தான் தோன்றித்தனமாக வாகனத்தைச் செலுத்துவதைக் கைவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பான வாகனச் செலுத்துகை

பாதுகாப்பான முறையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதியானவர் மற்றைய சாரதிகளின் முறைகேடான வாகன செலுத்துகைக்கும், மோசமான தெருக்களின் நிலைமைத்தன்மைகளையும், காலநிலைகளையும் கருத்திற்கொண்டு எந்த நேரமும் முன்னேற்பாடான முறையில் வாகனங்களைச் செலுத்தவேண்டும். அத்துடன் வாகனமானது தெருக்களில் செலுத்துவதற்குரிய நிலையில் உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

***யாழ். மாவட்டத்தில் வாகன விபத்துக்கள் விளைவிக்கும் விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டே காணப்படுகின்றன. அதற்கான காரணங்கள் பின்வருமாறு :-***

01. மது போதையில் வாகனம் செலுத்துதல்.

02. உள் வீதியிலிருந்து மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் வருவோர்கள்; பிரதான வீதியில் வருகின்ற வாகனங்களைக் கவனியாது நேரடியாகப் பிரதான வீதிக்குள் நுழைதல்.

03. நாற்சந்தி(மத்திய வளைவு)களில் வலப்பக்கம் வருகின்ற வாகனங்கள் செல்வதற்கு இடங்கொடாமை.

04. ஏதோ ஒரு வாகனம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளபோது அல்லது வாகனம் செல்லுகின்றபோது மோட்டார் சைக்கிளை அல்லது துவிச்சக்கர வண்டியை முன்னோக்கிச் செலுத்துகின்ற போது எதிரே வருகின்ற வாகனம் பற்றி அவதானம் இல்லாமல் வாகனம் செலுத்துதல்.

05. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தக் கொடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. அளவுக்கு அதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துதல்.

07. வீதியில் ஒரே சமாந்தரத்தில் மூன்று அல்லது நான்கு துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்துதல்.

08. பாதசாரிகள் வீதிகளைக் கடந்துசெல்ல அடையாளமிடப்பட்ட இடங்களில் அவர்களுக்கு இடங்கொடாமல் வாகனம் செலுத்துதல்.

09. திருத்தப்படாத (குறைபாடுள்ள) வாகனங்களை வீதியிற் செலுத்துதல்.

10. சேதமான தேய்ந்த டயர்களுடன் வாகனங்களைச் செலுத்துதல்.

11. வீதியில் இடம் உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்தாது நெரிசலான இடங்களில் வாகனங்களை நிறுத்தி வீதித் தடைகளை ஏற்படுத்தல்.

12. வீதி வளைவுகளில் எதிரே தெளிவற்றுக் காணப்படுகின்றபோது வாகனங்களை முன்னோக்கி செலுத்தல்.

13. வலப்பக்க வளைவிற் செல்லுகின்றபோது வாகனத்தை இடதுபக்க ஓரமாய்ச் செல்லாது; குறுகிய அளவில் வலது பக்கமாகவே பாரப்படுத்தி வளைவிற் செலுத்துதல்.

14. இரவு வேளையில் வெளிச்ச விளக்கு இன்றி அல்லது ஒருபக்க வெளிச்ச விளக்குடன் வாகனம் செலுத்துதல்.

15. இரவு வேளையில் எதிரே வருகின்ற வாகனங்களுக்குத் தமது வெளிச்ச விளக்கைக் குறைக்காமல் (டிம் இன்றி) வாகனத்தை செலுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இரவு வேளையில் வீதியோரங்களில் வாகனத்தை நிறுத்தி விடப்படுகின்றபோது அபாய விளக்கு எரியப்பட விடாமை.

17. இரவு வேளையில் துவிச்சக்கர வண்டியில் வெளிச்ச விளக்கு இல்லாமலும், பின்பக்கச் சில்லுச் சேர்த்தாங்கியில் (மக்காட்) வெளிச்சம் (சிவப்புக்கல்) இல்லாமற் செல்லுதல்.

18. தலைக்கவசம் இல்லாமல் (ஹெல்மட்) மோட்டார் சைக்கிளிற் செல்லுதல்.

19. வீதியைக் கடக்கின்றபோது முதலில் வலப்பக்கமும் பின்னர் இடப்பக்கமும் மீண்டும் வலப்பக்கமும் பாராமல் வீதியைக் கடந்து செல்லுதல்.

20. பஸ் நிறுத்தப்பட்டுள்ளபோது பின்பக்கம் செல்லாது முன் பக்கத்தால் வீதியைக் கடத்தல்.

21. பாதசாரிகள், சைக்கிள்கள் ஓட்டுனர்கள், சாரதிகள் ஆகியோர் இரு பக்கங்களும் அவதானம் இல்லாமற் செயற்படல்.

22. வாகனங்களைச் செலுத்துகின்போது கையடக்கத் தொலைபேசியிற் பேசுவதைத் தவிர்த்தல்வேண்டும்.

23. மேலே உள்ள குறைபாடுகளை அவதானித்துச் செயற்பட்டால் தாங்கள் விபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதுடன், விலை மதிக்க முடியாத உயிரையும், தங்களின் பெறுமதியான உடைமையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எதிர்காலங்களில் இந்தக் குற்றச் செயல்கள் சம்பந்தமாகச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகப் பொலிசாரால் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிச்சக்கர வண்டி செலுத்தும் முறை

01. முதலில் வீதியில் துவிச்சக்கரவண்டி செலுத்துவதற்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதனையும், உங்கள் மிதிவண்டிப் பொறிமுறை ரீதியில் நல்ல நிலையில் உள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

02. மிதி சைக்கிள் ஓட்டுபவர்கள், மிதி சைக்கிள்கள் ஓட்டப்பாதையிருப்பின் அதனையே உபயோகித்தல் வேண்டும். இல்லாதவிடத்து இடது நடைபாதைக்கு அருகாமையாக ஒருவர் பின் ஒருவராகத் துவிச்சக்கர வண்டியை உருட்டிச் செல்லுதல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரண்டு பேருக்கு அதிகமாகப் பக்கம் பக்கமாகச் செல்லுதல் கட்டாயமாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

03. சைக்கிள் ஓட்டும்போது நகர்ந்துகொண்டிருக்கும் இன்னொரு வாகனத்தை அல்லது அவருடன் போய்க்கொண்டிருக்கும் மற்றுமோர் சைக்கிள் ஓட்டுபவரைப் பிடித்துச் செல்லுதல் கூடாது. சைகைகள் கொடுக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும், திரும்பும்போதும் இரு கைபிடிச்சட்டத்தில் பிடித்திருத்தல் வேண்டும். போக்குவரத்துக்கிடையில் புகுந்து வளைவு நெளிவாக துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும். மிதி சைக்கிளின் முறையான கட்டுப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாக எப்பொருளையும் கொண்டு செல்லாதீர்கள்.

## வாகனத்தைச் செலுத்துவதற்கான அடிப்படையில் நிறைவு செய்யப்பட வேண்டிய விடயங்கள்

அ) சாரதி வாகனத்தை செலுத்துவதற்குரிய நிலையில் இருத்தல் வேண்டும். (உடல் ரீதியாகவும்)

01. வாகனம் செலுத்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

02. வாகனத்தின் செல்லுபடியான காப்புறுதி அத்தாட்சிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. சாரதிக்கான சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல்வேண்டும். (மேற்படி 3 அத்தாட்சிப்பத்திரங்களும் வாகனத்தைச் செலுத்தும் சந்தர்ப்பங்களில் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்பதை விசேடமாகக் கவனிக்கவும்)

ஆ) மதுபானம், போதைப் பொருள் பாவித்த சந்தர்ப்பத்தில் நித்திரை மயக்கம், களைப்பு, மனம் கிலேசமுற்ற சந்தர்ப்பங்கள், பணம் சம்பாதிக்கும் திடமான நோக்கு ஆகிய நேரங்களில் வாகனத்தைச் செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். மேலும் தொலைபேசி தொடர்பு, செருப்பு அணிதல், புகைப்பிடித்தல் என்பவற்றிலிருந்தும் விளங்கிக்கொள்ளவும்.

இ) வாகனத்தின் சுக்கானம், பிரேக் ஹாரன் (கார் ஒலி) வைபர், விளக்குச் சரியான முறையில் இயங்குகிறதா என்பதைக் கவனியுங்கள்.

ஈ) ஆசனத்தில் பட்டி இருந்தால் மாட்டிக்கொள்ளவும் பின்னால், பார்க்கும் கண்ணாடி, ஆசனம் என்பவற்றை உமக்கு ஏற்றபடி சரிசெய்து கொண்டு உமது வலது தோளுக்கு மேலாக பின்னாற் பார்க்கவும், இருபக்கங்களிலிருந்தும் வரும் வாகனங்களுக்குத் தொந்தரவு ஏற்படாதவாறு சமிக்ஞைகாட்டி, பிரயாணத்தைப் தொடங்கவும்.

**மோட்டார் கோச்சுக்களும் லொறிகளும்**

| | | |
|---|---|---|
| நகரசபைப் பகுதிக்குள் | - | மணிக்கு 50 கி. மீ. |
| நகரசபைப் பகுதிக்கு வெளியே | - | மணிக்கு 60 கி. மீ. |

**மோட்டார் முச்சக்கர வாகனங்களும் மோட்டார் முச்சக்கர வான்களும்**

| | | |
|---|---|---|
| எப்பெருந் தெருவிலேனும் | - | மணிக்கு 40 கி. மீ. |

**விவசாய உபயோகவாகனங்கள்**

| | | |
|---|---|---|
| எப்பெருந்தெருவிலேனும் | - | மணிக்கு 40 கி. மீ. |

**மோட்டார் கார்கள்,மோட்டார் சைக்கிளும் மேலே குறிப்பிடப்படா வாகனங்களும்**

| | | |
|---|---|---|
| நகரசபைப் பகுதிக்குள் | - | மணிக்கு 50 கி. மீ. |
| நகரசபைப்பகுதிகளுக்கு வெளியே | - | மணிக்கு 70 கி. மீ. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Note** :பட எண் என்பது பின்பக்கம் உள்ள பட சைகைகளின் எண்களாகும். அவ் எண்ணுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

### கவனமாகச் செலுத்தவேண்டிய சந்தர்ப்பங்கள்

பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடம், பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப்பாதைகள், சந்திகள், மலைச்சரிவுகள், வளைவுகள், பாடசாலை அதிகளவிலான வாகனங்கள், மக்கள் நடமாடும் பிரதேசம், ஈரலிப்பான பாதை, மழை, மூடு பனியுள்ள சந்தர்ப்பங்கள், மற்றும் செவிடர், ஊனமுற்றோர், சிறுபிள்ளைகள், விலங்குகள் என்பவற்றிலும் கவனஞ்செலுத்தவும்.

பட எண் 83 (18.62) (1.4) 29.28 (9.14) 33

### பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடங்களிற்கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் (சட்டங்கள்)

பாதசாரிகள் கடக்கும் மஞ்சள் கோட்டில் நிறுத்துதல், வாகனங்களுக்கு முன்னால் கடந்து செல்ல, ஹோணை ஒலிக்கச் செய்யக் கூடாது. பாதசாரிகளுக்குக் கடந்துசெல்ல இடம் கொடுக்க வேண்டும். பட எண் – 83

### வாகனங்களை முந்திச்செல்லக்கூடாத சந்தர்ப்பங்கள்

பாதசாரிகள் மாறும் இடங்கள், தீவிர வளைவு, மலை முகடு, அம்பு வடிவிலான பாலம், சந்தி, பாதையின் குறுகலான பகுதி, சமிக்ஞைக் கட்டுப்பாட்டினாற் குறிக்கப்பட்ட இடம். தனியான இரு வெள்ளை நிற கோடுள்ள பாதை அடையாளங்களை மறைக்கும் வகையிலும் வாகனங்களும் மக்கள் நடமாட்டம் அதிகமான பிரதேசங்கள் மேற்படி குறிப்பிட்ட இடங்களிலோ அல்லது அவ்விடங்களை அண்மிக்கும்போதோ வேறு வாகனங்களைக் கடந்துசெல்லக் கூடாது.

பட எண் 83 (9–14) 29. 8, (1–4) 16, 40 (88.94)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளைவீதியில் இருந்து பிரதான வீதிக்கு விடும்போது

பிரதான வீதியில் (பாதையில்) இருபக்கங்களிலும் அண்மையாக வரும் அனைத்து வாகனங்களுக்கும் செல்வதற்கு இடமளிக்க வேண்டும். ப. எண் 4, 60, 61, 85, 86.

### சுற்றுவட்டத்தின் சட்டம் (Roundabout)

வலது பக்கமாக அண்மையில்வரும் சகல வாகனங்களுக்கும் செல்வதற்கு இடமளிக்க வேண்டும். ப. எண் 26,73, 87

### வாகனத்தை நிறுத்துவதைத் தடைசெய்யும் இடம்

கட்டுப்பாட்டுச் சமிக்ஞைமூலம் குறிப்பிட்ட இடம் (ப.வி.45, 46, 47, 48, 91) பாதசாரிகள் கடக்கும் இடம், சந்தி வளைவு, மலை முகடு, பஸ், துவிச்சக்கர வண்டி ஒதுங்கும் இடங்கள், பஸ் நிறுத்துமிடம், பாதையின் குறுகலான இடம், பாலத்தின்மேல் தனியான, சோடியான வெள்ளை நிறக் கோடுகள் புகுமிட பாதை அடையாளமிடப்பட்ட இடங்கள், நடைபாதை மேலாக வாடகைக் கார் தரிப்புக்கள், தீயணைப்பு நீர்க்குழாய்க்கு அருகில், அதிவேக ஓடுபாதையின்மேல் ஏதாவது இடங்களின் உட்செல்லும், வெளியேறும் கதவு(Gate)களுக்கு அருகில், ஒரு சில காரணத்தால் தற்காலிகமாகப் பாதைத்தடை ஏற்பட்ட இடம்.
ப. எண் (83) (1,4) (9-14) (28,29) (76, 74) 78, 16, 8, 94, 88

### வாகனத்தை முந்திச் செல்லும்போது

01. முன்னாற் செல்லும் வாகனத்தைக் கடந்துசெல்ல உமக்குத் தேவையெனின் முன்பாதைத்தடையேதுமின்றித் தெளிவாகத் தெரிகிறதென்றால் கண்ணாடியைப் பார்த்து வலது பக்கம் திரும்பும் சைகை காட்டி; முன்வாகனத்திற்கு அறிவித்து; அவ்வாகனத்தைக் கடந்து விரைவாகச் செலுத்தவும் கடந்து சென்ற வாகனத்தின் பயணத்திற்குத் தடை ஏற்படாதவாறு செல்லவும், உமக்கு நேர் எதிராக முன்னால்வரும் வாகனத்தைப் பற்றியும் விசேட கவனஞ் செலுத்தவும். அணையும், எரியும் பிரதான விளக்கு நீர் வருவதுபற்றி மட்டுமே உணர்த்தும், அதில் உமக்கு முக்கியத்துவம் கிடையாது. (5வது சம்பந்தப்பட்டது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. வேறு ஒரு வாகனம் உமது வாகனத்தை கடந்துக் செல்லும் போது உமது வாகனத்தின் வேகத்தைக் குறைத்துப் பாதையில் இடமளிக்கவும்.

03. முன்வாகனம் வலது பக்கம் திருப்புவதற்குச் சைகை காட்டினால், பாதுகாப்பு உள்ளதெனில் இடப்பக்கமாகக் கடந்துசெல்லவும். அச்சந்தர்ப்பங்களைத் தவிர வேறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலது பக்கமாகக் கடந்து செல்லவும்.

## வாகனங்களுக்கிடையிலான இடைவெளி

முன்னாற் செல்லும் சாரதி தமது வாகனத்தை நிறுத்திக் கொள்ளும் முகமாகத் தேவையான அளவு இரண்டு வாகனத்திற்கும் இடைவெளி வைத்துக்கொள்ள வேண்டும். வாகனத்தின் வேகத்திற்கேற்பப் பிரேக் பாவிக்கும் தூர அளவு கூடும்.
கீழ் அட்டவணையைப் பார்க்க.


| வேகம் ம.கி.மீ | வாகனங்களுக்கிடையான இடைவெளி | நினைக்கும் கால தூரம் | பாவிக்கும் தூரம் |
|---|---|---|---|
| 35 எனின் | மீ 12 க்கு | மீ 6 | மீ 6 |
| 50 எனின் | மீ. 23 க்கு | மீ 9 | மீ 14 |
| 65 எனின் | மீ. 40 க்கு | மீ 12 | மீ 28 |
| 80 எனின் | மீ.56க்கு | மீ 15 | மீ 41 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திகளில் வாகனம் செலுத்தும் முறை

***01.*** T ***சந்தி***





***02. சுற்றுவட்டம்***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 03. நாற் சந்தி




***மேலேயுள்ள படங்களைக் கவனிக்க.***

**01.** எதிரில் உள்ள சந்தியில் இடப்பக்கமாகத் திருப்பவேண்டுமென்றால் முதலாவது கண்ணாடியை பார்த்துத் திரும்பும் சைகை காட்ட வேண்டும். பின் பார்க்கும் கண்ணாடியிற் பாதுகாப்புடன் பார்த்து இடப்பக்கமாகக் கோட்டில் வாகனத்தைச் செலுத்தவும்.

**02.** முன்னே வலது பக்கத்தில் திருப்ப வேண்டுமெனில் முதலாவது கண்ணாடியைப் பார்த்து; திருப்பும் சைகையைக் காட்டவும். பின், பார்க்கும் கண்ணாடியிற் பாதுகாப்புடன் பார்த்து; வலது பக்கத்தில் திரும்பும் வலது கோட்டில் வாகனத்தைச் செலுத்தவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பாதையில் நேரே முன்செல்ல வேண்டுமென்றால் இடமாகவும், மூன்று வாகனஞ் செலுத்தும் இடைவெளியுள்ள பாதையெனில் மத்தியில் அமைந்துள்ள வாகனப் பாதையில் செல்லவும்.

04. சந்திகள் விளக்கு சைகை (ஒளி) கள் மூலமும் பொலிஸ் சைகை மூலமும் செயற்படுத்தப்படுகின்றன. இவ்விரு முறையிலும் செயற்படுத்தப்படாத நிலையில் நாற் சந்தியில் வலப்பக்கமாக வாகனங்களுக்கு இடமளிக்க வேண்டும். T அமைப்புப் போன்ற சந்தியில் நீர் பிரதான பாதையில் இருந்து வலப்பக்கமுள்ள கிளைப்பாதைக்குத் திரும்பும்போது முன்னேவரும் வாகனங்களுக்கு இடமளிக்கவும்.

## வாகனத்தை நிறுத்தி வைத்தல்

1) வாகனத்தை நிறுத்துவதற்கு எண்ணினாற் பிரயாணஞ்செய்யும் திசைக்கு முகம் காட்டி வேறு வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு இடது பக்கத்தில் நிறுத்தவும். என்ஜினை செயல் இழக்கச்செய்து; ஹேன் பிரேக் இழுத்து; விசேடமாகப் பின் பக்கம் பார்த்துக் கதவை திறக்கவும். பூட்டியும் விடவும்.

2) கீழ்க்காணும் இடங்களில் வாகனம் நிறுத்தக்கூடிய தூர அளவு காட்டப்பட்டுள்ளது.
சந்திகளிலிருந்து மீ. 25
பஸ் நிறுத்துமிடங்களிலிருந்து மீ. 30
பாதசாரிகள் கடக்கும் இடத்திலிருந்து மீ. 25
தீயணைக்கும் நீர்க்குழாய் அமைந்துள்ள இடத்துக்கு மீ. 15.

## பின்பக்கத்திற் செலுத்துதல்

பின்பக்கமாகச் செலுத்தும்போது பார்வை தெளிவாக இல்லாதபடியாற் கவனமாகச் செலுத்தவும், கிளைப்பாதையில் இருந்து பிரதான பாதைக்குப் போவது கூடாது. பிரதான பாதையில் இருந்து சிறு பாதைகளுக்கு வாகனத்தை செலுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரவு நேரத்தில் ஓட்டுதலும்: நிறுத்தி வைத்தலும்**

1) நித்திரை மயக்கம், களைப்பு மிகுதியாக இருப்பின் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

2) வாகனத்தின் முன்கண்ணாடி தெளிவில்லையெனில், கழுவிச் சுத்தமாக்கிக் கொள்ளவும். மழை மற்றும் மூடுபனி என்பனவற்றிற்கு விசேடமான கவனஞ்செலுத்தவும்.

3) பாதையில் வேறு வாகனங்கள் முன்னே எதிர்ப்படும் வேளையில் உமது பிரதான விளக்கின் வெளிச்சத்தைக் குறைத்துக் கொள்ளவும். எதிர்வாகனத்தின் பிரதான விளக்கு ஒளியில் உமது கண், ஒளித்தாக்கம் பெற்றால், வேகத்தைக் குறைக்கவும், பாதை தெரியவில்லை என்றால் வாகனத்தை நிறுத்தவும், விசேடமாகச் சாரதியின் பக்கமாகவுள்ள விளக்குச் செயலிழந்த வேளை விபத்து ஏற்படவாய்ப்புண்டு.

4) வாகனத்தை நிறுத்தவேண்டுமெனில் பாதையில் ஓடும் வாகனங்களுக்குத் தடை ஏற்படாதவாறு நிறுத்தும் விளக்கை எரியவிட்டுப் பிரயாணஞ் செய்யும் திசைக்கு முகங்காட்டி இடது பக்கத்தில் நிறுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீர் விபத்து

1) உமது வாகனம் செயலிழந்துவிட்டால் இயன்றளவு கெதியில் வாகனத்தைப் பாதையில் இருந்து வெளியே எடுக்கவும். திடீர் விபத்தொன்றின்போதுகூட, விபத்து நடந்த மற்றவர்களுடன் பேசி; விபத்துக்கான வாகன அடையாளமிட்டு, பாதையிலிருந்து வெளியே எடுக்கவும். பாதையிற் செல்லும் எந்தவொரு வாகனத்திற்கும் எந்தவொரு இடையூறும் நடக்கக்கூடாது.

   * **விபத்து நடந்தால் 24 மணித்தியாலத்திற்குள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவேண்டும்.**

2) காயங்களுக்குள்ளான ஒருவரால் வேண்டும் பட்சத்தில் அல்லது விபத்தின் காரணமாக அவரின் உயிருக்கு ஆபத்தான நிலை என்பதாக நினைப்பின்; காயம்பட்டவரை உடனடியாக அருகிலுள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லவும். வாகனத்தை நிறுத்தாது தப்பியோடுவதைத் தவிர்க்கவும், விபத்து ஏற்பட்டாற், சாரதி; வாகனத்தை முதலாவது நிறுத்தவேண்டும்.

3) ஏதாவதொரு பொலிஸ் உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், காயப்பட்ட ஆள் ஒருவர், நஷ்டமேற்பட்ட ஒருவர் அல்லது சொத்துரிமையாளர் அல்லது பொறுப்பான எவராவது உமது பெயர், முகவரி, சொந்தக்காரரின் பெயர், முகவரி வாகனத்தின் இலக்கம் ஆகிய விபரங்களைக் கேட்கும் போது பிழையின்றிக் கொடுக்கவேண்டும்.

4) விபத்து நடந்த வேளை நீர் வாகனத்தைச் செலுத்தியதாகவும், உமது பெயர், முகவரியுடன் எல்லா விபரங்களையும் அருகில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில், அதன் பொறுப்பான பொலிஸ் அதிகாரியிடம் உடனடியாகத் தெரிவிக்கவேண்டும்.

5) விபத்து நடந்த வாகனத்தை வெளியே எடுக்கமுடியாத சந்தர்ப்பத்தில் அபாயத்தை அறிவுறுத்தும் விளக்கை எரிய விடவேண்டும்.

6) திடீர் விபத்தைத் தவிர்க்கும்போது வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாத வேளையில், விதிச்சட்டத்தை மீறுதல் குற்றமாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெரிந்துகொள்ளவேண்டிய வேறு விடயங்கள்**

உமது வாகனத்தின் மேலதிக சக்கரத்துடன் ஜெக் வீல்பிரஷ் ஸ்வைத்துக்கொள்ள வேண்டும். அவசரத்துக்கு ரயரொான்றை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும்.

- உமது வாகனத்தின் எரிபொருள், றேடியேட்டரிலும், பெற்றரியில் நீர் இருக்கிறதா என்பதைப் பார்க்கவும், பிரேக் ஒயில், எஞ்சின் ஒயில் இருக்கிறதா என்பதைக் கவனத்திற் கொள்ளவும். (அது பற்றிச் சிவப்பு மின்சார ஒளிவாயிலாக அறியலாம்)

- பாதையினருக்குச் சைகை :- குறியீட்டுச் சைகை பாதை அடையாளங்கள்.

- சைகை வகை :- ஆபத்தைத் தெரிவிக்கும் சைகை , கட்டுப்பாட்டுச் சைகை, விபர சைகை, வரையறைச் சைகை, முக்கியத்துவ சைகை என்பன)

- சைகை (சிக்னல்) எதிர்பார்ப்பானது :- தனது செயற்பாட்டை மற்றவர்களுக்கு அறிவிப்பது.

- ஆபத்தைத் தெரிவிக்கும் விளக்கை பாவிக்கும் நேரம் :- வாகனம் உடைந்த நிலையில் இருப்பதை அறிவிப்பதற்கு மட்டுமே, கட்டாயமாக நிறுத்தி வைத்துள்ள வேளையில் அல்லது இழுத்துக் கொண்டு போகும் வேளையில்.

- வளைவுகளில் வேகத்தைக் குறைப்பதற்காக :- பிரேக்கை வளைவை அடைவதற்கு முன்னரே உபயோகப்படுத்த வேண்டும்.

- குருடனை அறிந்து கொள்ள :- வெள்ளைக் கைத் தடியினால் பிரதான விளக்கின் பகுதிகள் : பிரதான ஒளி , மந்த ஒளி.

- ஓட்டும்போது எந்த நேரமும் வாகனம் இருக்க வேண்டியது :- இடப்பக்கம் (ஓட்டப்பாதையிற் செலுத்தும்போது இது அவசியமில்லை ஓட்டப்பாதையிற் செல்லவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தைக் கடந்துசெல்லும் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியிருப்பது, நிறுத்தி வைத்துள்ள வாகனத்தின் பின்பக்கத்தில் நடந்து செல்பவர் பாதைக்குப் பாய்வதற்கு இடமிருப்பதாலும், வாகனத்தின் பாதைப் பக்கமாகக் கதவுகளை திறப்பதற்கு இடமிருப்பதாலுமே.

◇ வாகனத்தின் வேகத்தை அதிகரிக்கக் கூடாத சந்தர்ப்பம் வளைவு ஒன்றில் வழுக்கும்போது.

◇ வாகனத்தின் பிரேக்கை உபயோகிக்கக் கூடாத வேளை :- வழுக்கும்போது.

◇ வாகனமொன்று வழுக்கிச் செல்வதற்கு ஆரம்பிக்கும்போது செய்ய வேண்டியது :- எக்சிலேட்டரைக் கைவிடுதல்; வழுக்குவது பின்பக்கச் சக்கரமொன்றால் வழுக்கும் பக்கத்திற்குச் சுக்கானைச் சுற்றுதல். (திருப்புதல்)

◇ வலது பக்கமாக ஒட்ட முடியுமான வேளைகள் :- (முந்திச்செல்லும்) போதோ, அல்லது வலப்பக்கம் திரும்பும் வேளை.

◇ பாதையைக் கடக்கும் கோட்டின் இரு பக்கங்களிலும் சீப்ரா கோடு (நெளிவான கோடு) இழுக்கப்பட்டிருந்தால், எதிரிற் பாதசாரிகள் பாதைமாறும் இடம் இருக்கின்றது என்பதை அறிவிப்பதாகும்.

◇ பின்னால்வரும் வாகனத்தைப் பற்றிப் பின்பார்க்கும் கண்ணாடியில் தெரியும் தூரம் அளவு ( இயற்கையான தூரம்) சரியானவை அல்ல. அது பற்றிக் கவனம் செலுத்தவும்.

◇ நீர் ஒரு திறமான சாரதி என்பதற்கு, வீதிச் சட்டங்களுக்கு மதிப்பளித்துக் கவனத்துடன் ஒட்டுவதே ஆகும். உமக்கு எதிரில் இருக்கும் எந்தவொரு வாகனமோ அல்லது மனிதரோ; அவர்கள் சம்பந்தமாக அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி உடனடியாக உணர்ந்துகொள்ளும் ஆற்றல் கொண்டிருக்க வேண்டும். அவரின் செயலுக்கு முன்னரே அது பற்றி விளக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு விபத்தை தவிர்த்துக்கொள்ளும் திறமையிருக்க வேண்டும். திடீர் விபத்து ஏற்படுவதற்கு இடமுள்ள வேளையில் நல்ல மனத்திடனும், விபத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், தனக்குக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலேயும் வாகனத்தை ஓட்ட வேண்டும்.

# தொழில் நுட்ப அறிவு

***என்ஜின்***

◇ *என்ஜினின் (இயந்திரம்) சக்தி குறைவு (அன்டகம்பவுர்) கண்டுகொள்ளல் :-*

இயந்திரத்தில் எண்ணெய் விடும் மூடியில் எண்ணெய் வெளியேற்றுதல், பிலிதரிதல் புகைவெளியேறுதல். டீசல் அல்லது பெற்றோல் வாகனங்களின் ரின்செட் அல்லது ஸ்லீவ் தேய்வதால் சைலன்சரில் நீலப் புகை வெளியேறுதல், டீசல் வாகனத்தில் இன்ஜெக்டர் அல்லது பொம்ப் சரியாக இயங்காத சந்தர்ப்பங்களில் அல்லது பெற்றோல் வாகனங்களின் காபறேற்றர் சரியாகப் பூட்டப்படாதவிடத்து பச்சைப் பெற்றோல் வ'ரும் அதே வேளை கரும்புகை வெளியேறும்.

◇ *இயந்திரத்திற்கு எண்ணெய் (என்ஜின் ஒயில்) விடுவதற்குக் காரணம் :-*

இயந்திரத்தின் பிரிவுகள் வழுக்கிச் செல்ல வேண்டுமென்பதற்காக.

◇ *இயந்திரத்தின் எண்ணெய் மட்டத்தைப் பரிசோதித்தல் :-*

ஆழத்தைப்பார்க்கும் அளவு கோலினால் (டப்ஸ்டிக்)

◇ *இயந்திரத்தில் எண்ணெய் குறைவதற்கான காரணம் :-*

வெளியே எண்ணெய் வெளியேறுதல் அல்லது எண்ணெய் கருகுதல்

◇ இயந்திரம் சூடேறுவதற்கு :- பேன்பெல்ட் தளர்வடைதல், ரேடியேற்றரில் தண்ணீர் இல்லாது போதல், அல்லது தண்ணீர் போக்குவரத்துத் தடைப்படுதல் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இயந்திரம் சூடேறுவதைத் தெரிந்துகொள்வது :- ரேடியேற்றரில் தண்ணீர் சூடாவதிலிருந்து
- இயந்திரம் செயற்படாமை (வேலை செய்யாமை) : பெற்றரியின் குறைவாடு, மோட்டர் வேலை செய்யாமை, இயந்திரம் அடைப்படுதல்.
- இயந்திரத்தை உயிரூட்டும்போது (இழுத்து இழுத்து) செயற்படல்: பெற்றரி இறங்குதல். மோட்டரில் உள்ள குறைபாடுகள்.
- பேன்பெல்ட் தளர்வடைந்தால் இயந்திரம் அளவிற்குமேற் சூடேறும். பெற்றரி சார்ஜ் ஆகாது.

**பிரேக்**

- பிரேக் இல்லாதபோது செய்யவேண்டியது :- சிலதடவை பிரேக்கை விட்டுவிட்டு மிதித்தல், ஹேன்பிரேக் இழுத்தல். இயந்திரத்தின் செயற்பாட்டை நிறுத்துதல், பாரமான (வலுவான) கியரை (1-2) போட்டு 'கிளச்' சை மிதிக்காது இருக்க வேண்டும்.
- பிரேக் இல்லாது போவதற்குக் காரணம் :- பிரேக் ஓயில் (எண்ணெய்) அற்றுப்போதல், காற்று பிரேக்கில் காற்று இல்லாது போதல், மற்றும் மணல், எண்ணெய்ப் பசையுள்ள இடங்களிற் பிரேக் போடும்போது வழுக்கிச் செல்வதற்கு ஏதுவாகும்.
- பிரேக் ஓயில் (எண்ணெய்) குறைவதற்குக் காரணம் :- சிலிண்டர் தேய்வடைதல், பிரேக் வொசர் தேய்வடைதல்.
- வாகனத்தில் ஒரு சக்கரத்தில் பிரேக் ஓயில் ஒழுக்கு ஏற்பட்டால்:- பிறேக்கை அழுத்தும்போது எண்ணெய் ஒழுக்கு ஏற்பட்ட சக்கரத்தின் எதிர்பக்கம் வாகனம் இழுபடும்.
- ஓடும்போது பிரேக் உபயோகித்தால் ஒரு பக்கத்திற்கு இழுபடுவதென்றால் :- பிரேக் சரியாகச் சமனளவிற் பொருத்தப்பட்டிராமை (முன்பக்க ஒரு சக்கரத்தில் பிரேக் கூடுதலாகும்). பிரேக் லைனஸ்களுக்கு எண்ணெய் சிதறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகும். ஒரு சக்கரத்திற் காற்று அதிகமாதல். ஒரு டயர் தேய்ந்துவிட்டதாற் பிரேக் பாவிக்க முடியாத சந்தர்ப்பங்களில் கூடப் பக்கத்திற்கு இழுபடுவதற்கு ஏதுவாகும்.

- வாகனத்தை நிறுத்தும்போது:- பிரேக் பெடலை மிதித்து இயந்திரம் நிற்பதற்கு அண்மிக்கும்வேளை கிளச் பெடலை மிதிக்கவேண்டும். பின்னர் கியரை நியூட்டல் செய்யவும்.
- ஹைட்ரொலிக் பிரேக் வேலை செய்வது :- எண்ணெயில்

**கியர்**

- கியர் பெட்டியொன்று இருப்பதன் உபயோகம் :- வாகனத்தின் வேகத்தை மாற்றுவதற்காக
- கியர் போடுவதற்கு கடினமாவது :- கிளச் ஒன்றின் குறைபாடு அல்லது கியர் பெட்டியின் குறைகள்.

**பெற்றரி**

- பெற்றரியிலுள்ள பிரயோசனம் :- இயந்திரத்தை இயக்குவதற்கும் (விளக்கு, ஹாரன்) செயற்படவைப்பதற்கும்.
- பெற்றரி சார்ஜ் (மின் புகுத்தல்) ஆகவில்லையெனில்:- முதலாவது பேன்பெல்ட்டைப் பரிசீலிக்கவேண்டும். அத்துடன் பெற்றரி ஒல்டனேடர் அல்லது கட்அவுட் ஆகியவை பரிசீலனை செய்யவேண்டும். சார்ஜ் ஆகாததை எம்பியர் மீட்டரில் அல்லது சிவப்புக் குமிழ் வாயிலாகக் காணமுடியும்.
- பெற்றரி ஓவர் சார்ஜ் (அளவுக்குமீறிய மின் புகுத்தல்) ஆகுதல் :- அதிகமாக மின்சாரம் பெற்றரிக்குச் செல்வதால்
- பெற்றரிக்கு அதிகமாகத் தண்ணீர் ஊற்ற வேண்டியதற்கான காரணம்:- கூடுதலாக ஓவர் சார்ஜ் ஆவதன் காரணமாக
- ஓட்டும்போது பிரதான விளக்குடன் ஹாரன் செயலிழந்தால் :- பெற்றரி இறங்குதல், பெற்றரியின் வயர் (டர்மினர்) தளர்வடைதல்
- ஓட்டும்போது பிரதான விளக்கு அல்லது ஹாரன் (ஒளிஎழுப்பி) தனித்தனியாக செயலிழந்தால் அதற்கு சம்பந்தப்பட்ட பியூஸ் சோதனை செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ தீப்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் (வயர் ஷோட்) :- பெற்றரியின் வயரை (டர் மினர்) உடனே கலட்டி சாக்கொன்றினால் தீயை மூடவும்.

◇ ஓல்டனேட்டரின் உபயோகம் :- மின்சாரத்தை உற்பத்தி செய்வதே.

***கிளச்***

◇ கிளச் ஒன்றின் உபயோகம் :- கியர் பெட்டியின் இயந்திரத்தையும் இணைத்துக்கொள்ளல் அல்லது பிரித்துக்கொள்ளல்

◇ கிளச் வழுகிச் செல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளல் :- இயந்திரத்தின் வேகத்திற்கேற்ப வாகனம் செல்லாமை (ஆரம்பிக்கும்போது தளர்வான கியரொன்றின் வேகத்தைக் கூட்டும்போது அதிகமான இரைச்சலுடன் கிளச் பிளேட் வழுகிச் செல்லல்)

◇ கிளச் வழுகிச் செல்வதற்குக் காரணம் :- கிளச் பிளேட் தேய்வடைதல், பிரஷர் பிளேட்டில் பிரஷர் (அமுக்கம்) குறைவடைதல், கிளச்சிக்கு எண்ணெய் படுதல்.

◇ கிளச் வழுகிச் செல்கிறது என்பதைச் சோதிப்பது :- ஹேறன் (கை), பிரேக் இழுத்து வாகனத்தை உயிரோட்டி வழுவான (பாரமான) கியருக்கு (1-2) போட்டு அதன்பிறகு மெதுவாகக் கிளச்சை விடவும். கிளச் நல்லதென்றால் இயந்திரம் (என்ஜின்) நின்றுவிடும்.

***சுக்காணம் (சுக்காணி)***

◇ ஓட்டும்போது சுக்காணம் அசைதல் :- பெட்டி சரியான வகையில் வைக்கப்படாமை (போல் ஜொயின்ட் கிம் பின் புஷ் சக்கல்பின்ரேஷர் மற்றும் டயர் ரோட் தேய்வதன் காரணமாவதுடன் முன் பக்கச் சக்கரங்களிற் காற்றுக் குறைவு, கூடுதலாலும், தேய்வுற்ற டயர் இருப்பதும் காரணமாகும்.

◇ சுக்காணம் இறுக்கமாதற்குக் காரணம் :- சுக்காணம் பெட்டி இறுக்கமடைதல் (கிரீஸ் இல்லாது போதலினாற் சுக்காணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியில் போல் ஜொயின்ட் மற்றும் கிம்பின் புஷ் இறுக்கமடைதல், முன் சில்லுகளிற் காற்றுக் குறைவடைந்த நிலையிலும் சுக்காணம் இறுகும்) பவர் ஸ்டியரின் என்ற ஹைட்றொலிக் பொம்பில் எண்ணெய் இருக்கிறதா என்பதைப் பார்க்கவும்.

- சுக்காணம் ப்ளே (சுதந்திரமாக சுற்றும் அளவு) கூடுவதற்குக் காரணம்: சுக்காணம் பெட்டியின் பகுதிகள் சரியான முறையில் இறுக்காமல் விடுதல் (போல் பெஜின்ட், வீல் பெயாரின் தளர்வடைதல், டயர் ரோட் தேய்வடைதல் காரணங்களாகும்.

*டயர்*

- டயர் ஒருபக்கம் தேய்தல் :- எலயிமஸ்களின் வித்தியாசம்
- டயர் இடத்திற்கிடம் தேய்தல் :- ஷொக்கட் ஷோபர் கெட்டிருந்தால்.
- டயர் மத்தியில் தேய்தல் :- காற்றுக் கூடியிருத்தல்
- டயர் இருபுறமும் தேய்தல் :- காற்றுக் குறைந்திருத்தல்
- (சாதாரணமாக டயர் சீக்கிரமே தேய்வதற்கு அதிக வேகமும் காரணமாக அமையும்)
- வளைவுகளில் டயர் சத்தமெழுப்புவது: -
  எலயிமன்ஸ் சரியான வகையில் அமைக்கப்படாமையால் டயர்களில் காற்று கூடுதல்; குறைதலும் காரணம் ஆகலாம்.
- டிபரன்சலின் நன்மைகள் : -
  வளைவுகளில் இருபுறமும் உள்ள சில்லுகளின் வேகம் கூட்டவும், குறைக்கவும் (வளைவுகளில் கிட்டே திருப்பப்படும் சக்கரமும் தூரத்தில் திரும்பும் சக்கரமும் வித்தியாசமாக சுழல்வதனால் ஆகும்)
- பிரண்ட் வீல் (முன்சில்லு) வாகனமொன்றால் : -
  என்ஜினும் கியர் பெட்டிக்கு முன்னால் உள்ள சில்லுகளுக்குச் சம்பந்தப்பட்டுச் சக்தியைப் பெற்றுக் கொடுத்தல்.
- டீசல் வாகனத்தில் எண்ணெய் முடிந்து பொம்பவுக்குள் காற்று நிரம்பினால் : - டீசல் விட்டு பொம்பவில் காற்றை அகற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ அடிச்சட்டம் உடைவதால் நடப்பது :-

வாகனத்திற்குப் பாரத்தைச் சுமந்து நிற்பது கடினமாகும். வாகனத்தின் அமைப்பு வித்தியாசமடையும்.

## நிற்பக்கங்களில் உள்ள சமிக்ஞைப் படங்களின் மேலதிக விளக்கம் (பட எண்ணுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்)

◇ **பட எண் : 8**

குறுகிய பாலம் முன்னே. எதிரில் வரும் வாகனத்துடன் குறுகிய பாலத்தில் மாறவேண்டாம். கடப்பதற்கும் எத்தணிக்க வேண்டாம்.

◇ **பட எண் : 45**

இதுபோன்ற கட்டுப்பாட்டுச் சமிக்ஞை உள்ள பக்கம் வாகனத்தை நிறுத்துவதுகூடாது என்ற போதிலும், அவசர நேரத்தில் இயந்திரத்தை நிறுத்தாது வாகனத்தை நிறுத்த முடியும்

◇ **பட எண் : 46**

இதில் தெரிந்துகொள்ள வேண்டியது: எக்காரணம் கொண்டும் நிறுத்தவோ, நிறுத்திவைக்கவோ கூடாது என்பதாகும்.

◇ **பட எண் : 49–50**

இந்த மேலதிக அறிவித்தற் பலகை உட்படுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு ஆபத்து அறிவிப்புச் சமிக்ஞை, கூடாதென்ற சமிக்ஞை அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சமிக்ஞை ஏற்படும்போது குறிப்பிட்ட தூர அளவு அறிவிப்பதாகும். அப்பாதை சமிக்ஞைக்குக் கீழ் மேலதிகமாகச் சாரதிகளுக்கு, தூர அளவைத் தெரிந்துகொள்வதற்காகும்.

◇ **பட எண் : 54**

காட்டப்பட்டுள்ள அகலத்திற்குக் கூடுதலான அகலம் கொண்ட வாகனமோ, சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பிரயாணஞ் செய்வது கூடாது.

◇ **பட எண் : 55**

காட்டப்பட்டுள்ள உயரத்திற்குக் கூடுதலான உயரம் கொண்ட வாகனமோ, சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பயணஞ் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ **பட எண் : 56**

காட்டப்பட்டுள்ள பாரத்திற்குக் கூடுதலான பாரம் உடைய வாகனமோ; சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பயணஞ் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

◇ **பட எண் : 57**

காட்டப்பட்டுள்ள எக்சல் பாரத்திற்குக் கூடுதலான பாரம் உடைய வாகனமோ; சாமான் ஏற்றப்பட்ட வாகனமோ பயணஞ் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

◇ **பட எண் : 58**

காட்டப்பட்டுள்ள வேகத்திற்குக் கூடுதலான வேகத்தில் வாகனம் பயணஞ்செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

◇ **பட எண் : 59**

வாகனங்களில் வேகம் சம்பந்தப்பட்ட கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

◇ **பட எண் : 60,86**

சிறிய பாதையிற் பயணஞ் செய்யும் வாகனங்களினாற் பிரதான பாதையிற் பயணஞ் செய்யும் வாகனங்களுக்கு இடமளிக்க வேண்டுமென அடிப்படையான சிறு பாதையில் வாகனஞ் செலுத்தும் சாரதிகளுக்கு அறிவித்தல்.

◇ **பட எண் : 61, 85**

சிறிய பாதையிற் செல்லும் பயணஞ் செய்யும் வாகனங்களைக் கட்டாயமாக நிறுத்தி, பிரதான பாதையிற் பயணஞ் செய்யும் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென மேற்படி பிரதான பாதையிற் செல்லும் வாகன சாரதிகளுக்கு அறிவித்தல்.

◇ **பட எண் : 63**

பிரதான பாதைக்கு உட்புகும் சிறிய பாதையிற் பயணஞ் செய்யும் வாகனத்தினால், பிரதான பாதையின் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமென மேற்படி பிரதான பாதையிற் செல்லும் வாகன சாரதிகளுக்கு அறிவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◇ **பட எண் : 64**

பிரதான பாதையிற் செல்லும் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது முடிந்துவிட்டன என்பதைப் பிரதான பாதையிற் பயணஞ் செய்யும் சாரதிகளுக்கு அறிவித்தல்

◇ **பட எண் : 65**

பாதையின் குறுகிய பகுதியை நோக்கி அண்மிக்கும் வாகனங்களின் சாரதிகளினால், அதன் குறுகிய பகுதியில் எதிரில் வரும் வாகனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென அறிவித்தல்.

◇ **பட எண் : 66**

பாதையிற் குறுகிய பகுதியின்மேல் இருந்து எதிரில்வரும் வாகனங்களின் சாரதிகளினால் முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதை அறிவித்தல்.

◇ **பட எண் : 73**

சுற்று வட்டத்திற்கு (சுற்றுவளைவு) அண்மிக்கும்போது, வாகன ஓட்டப் பாதையில் (படம் 87 ஐப் பார்க்கவும்) வீதி அடையாளத்தில் வலப்பக்கமிருந்துவரும் பாதையிலும் சுற்று வளைவின் வலதுபக்க ஓட்டப்பாதையில் அண்மிக்கும் சகல வாகனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கவும். அம்பு அடையாளத்திற் காட்டியுள்ள திசைக்கு ஏற்றவாறு வாகனத்தை அவ்விடத்திலிருந்து கடக்கவும்.

◇ **பட எண் : 74**

பாதையிற் சைக்கிளின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட ஓட்டப்பாதை ஆரம்பிக்கும் இடம்.

◇ **பட எண் : 76**

பாதையில் பஸ்வண்டிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஓட்டப்பாதை ஆரம்பிக்கும் இடம்.

◇ **பட எண் : 95**

பாதை அடையாளங்களுக்கு இருபக்கத்தில் ஓட்டப்பாதையில் நெடுக ஒவ்வொன்றுக்கும் எதிருக்கு எதிரான திசைக்கு வாகனப்போக்குவரத்து நடைபெறும்போது (வலதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புதல்) உட்புகுதல் பாதுகாப்பானதெனச் சாரதி கண்டால் அல்லது உட்புகுதல் கூடாது. ஒட்டப்பாதையில் ஆபத்தான பகுதி வாகனங்களுக்கு அறிவுறுத்தும் நோக்கிற் பாதையின் மேல் குறிக்கப்பட்டுள்ள பாதை அடையாளம்.

- **பட எண் : 96**

  பாதை அடையாளங்களுக்கு இரு பக்கமும் பாதையைப் பிரித்து ஒட்டப்பாதையின் நெடுகிலும் ஒரே திசையில் (படவிளக்கத்தில் இருந்து) வாகனப் போக்குவரத்துச் செய்யும் சந்தர்ப்பங்களில் ஆபத்தான பகுதியை வாகனங்களுக்கு அறிவுறுத்துவதற்காகப் பாதையின்மேல் குறித்துள்ள பாதை அடையாளம்.

- **பட எண் : 116**

  பாதசாரிகள் வீதியின் குறுக்கே செல்லுதல் கூடாது.


- **பட எண் : 117**

  பாதசாரிகளுக்குப் பாதையின் குறுக்கே செல்வதற்கு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைகை விளக்கின் மூலம் வாகனத்தைச் செயற்படுத்தல்



**1) சிவப்பு நிறம்: நில்**

சைகை விளக்கில் சிவப்பு நிறம் காட்டினால் நிறுத்தும் கோட்டின் பின்னே நிறுத்த வேண்டும்.




**2) சிவப்பும் செம்மஞ்சள் நிறமும்:-** செல்வதற்குத் தயாராகச் சிவப்பு விளக்கு எரியும் போது செம்மஞ்சள் விளக்கு எரியத் தொடங்கினால், பச்சை விளக்கு எரிவதற்கு அண்மித்துள்ளது என்பதாகும். ஆகையாற் செல்வ-தற்குத் தயாராக வேண்டும். (முன்னுக்குச் செல்லக்கூடாது)




**3) பச்சை நிறம்: செல்**

பச்சை விளக்கிற்கு முகங்காட்டி நிற்கும் வாகனங்கள் நேரே முன் செல்ல முடியும் பாதுகாப்புள்ளதெனில், இடப்பக்கமோ வலப்பக்கமோ செலுத்த முடியும்.



**4) செம்மஞ்சள் நிறம்: நில்**

சிவப்பு நிற வெளிச்சம் எரிவதற்கு மிகவும் குறுகிய நேரமே இருக்கிறது நில்.




**5) சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறி:**

சிவப்பு நிறமும் பச்சை அம்புக்குறியின் அடையாளமும் பச்சை நிற அம்பு காட்டும் திசையால் மட்டும் ஓட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதே.



**6)விட்டு விட்டு எரியும் செம்மஞ்சள் சமிக்ஞை:-**

விட்டு விட்டு எரியும் செம்மஞ்சள் நிற சமிக்ஞையில் அறிவிப்பதாவது சமிக்ஞை விளக்கு மூலமோ, பொலிஸ் சமிக்ஞை மூலமோ செயற்பட வில்லை என்பதே. அப்படியெனில் சாதாரணமாகச் சந்திகளில் நடை முறைப்படுத்தப்படும் வீதிச்சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். (2-4) சம்பந்தமானது.



**7) விட்டு விட்டு எரியும் சிவப்பு நிற சமிக்ஞை:-**

அதில் அறிவுறுத்தப்படுவது புகையிரதக் குறுக்குப் பாதை, தீயணைப்பு மத்தியஸ்தானம் ஆகியன அவ்வித இடங்களில் வாகனத்தை நிறுத்தி இடமளிக்க வேண்டும். (இச் சைகைகளுக்குக் கட்டாயமாக அடி பணிய வேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நிறுத்துங்கள்


நிறுத்துங்கள்


முன்னே வாருங்கள்


முன்னாலும் பின்னாலும் இருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்


முன்னே வாருங்கள்


பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்

## வேகக் கட்டுப்பாட்டு விதிகள்

**மோட்டார் கோச்சுக்களும் லொறிகளும்**

| | |
|---|---|
| நகரசபை பகுதிக்குள் | - மணிக்கு 50 கி.மீ. |
| நகரசபை பகுதிக்கு வெளியே | - மணிக்கு 60 கி.மீ. |


**மோட்டார் முச்சக்கர வாகனங்களும் மோட்டார் முச்சக்கர வான்களும் விவசாய உபயோக வாகனங்களும்**

| | |
|---|---|
| எப்பெருந்தெருவிலேனும் | - மணிக்கு 40 கி.மீ. |

**மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் மேற்குறிப்பிடாத வாகனங்களும்**

| | |
|---|---|
| நகரசபை பகுதிக்குள் | - மணிக்கு 50 கி.மீ. |
| நகரசபை பகுதிக்கு வெளியே | - மணிக்கு 70 கி.மீ. |

**ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்தை நிறுத்த நினைக்கும் தூரமும் தடுப்பின் தூரமும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முன்னால் இடப்பக்க வளைவு


முன்னால் வலப்பக்க வளைவு


முன்னால் இடப்பக்கமாக இரட்டை வளைவு


முன்னால் வலப்பக்கமாக இரட்டை வளைவு


முன்னால் வலப்பக்கமாக கொண்டை ஊசி வளைவு


முன்னால் இடப்பக்கமாக கொண்டை ஊசி வளைவு


இரட்டை வண்டிப்பாதை முன்னால் முடிவடைகிறது


வீதி முன்னால் ஒடுங்குகிறது


முன்னால் குறுக்கு வீதிகள்


முதலாவது பக்க வீதியை இடப்பக்கமாக கொண்டு அடுத்து வரும் சந்தி


முதலாவது பக்க வீதியை வலப்பக்கமாக கொண்டு அடுத்து வரும் சந்தி


முன்னால் 'T' வடிவ சந்தி


முன்னால் 'Y' வடிவ சந்தி


இடமிருந்து வரும் வாகனம் முன்னால் இணைகிறது


வலமிருந்து வரும் வாகனம் முன்னால் இணைகிறது


ஒடுக்கமான பாலம் முன்னால்


முன்னால் நிறுத்தவும்


முன்னால் வழி விடவும்


முன்னால் சுற்று வளைவு


முன்னால் ஒளிச் சமிக்ஞைகள்


அபாயகரமான சரிவு முன்னால்


அபாயகரமான ஏற்றம் முன்னால்


வழுக்கும் வீதி முன்னால்


முன்னால் கற்பாறைகள் விழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னால் பாதசாரிகள்
மாறும் இடம்



முன்னால் சிறுவர்
மாறும் இடம்



முன்னால் பாதை
வேலை



பாதுகாப்புடைய புகையிரத
கடவை முன்னால்



பாதுகாப்பற்ற புகையிரதக்
கடவை முன்னால்



முன்னால் பஸ்
பயணிக்கும் பாதை



முன்னல் துவிச்சக்கர
வண்டி ஒழுங்கை முன்னால்



துவிச்சக்கர வண்டி
கடவை முன்னால்



மந்தை அல்லது வேறு
விலக்கு முன்னால்
பாதையை கடக்க கூடும்



ஓடைத்துறை ஒன்றிலுள்ள
வீதி முன்னால்



முந்துரிமை ஆரம்பம்



முந்துரிமை முடிவு



உட்செல்லத்
தடை



இடப்பக்கம் திரும்பத்
தடை



வலப்பக்கம் திரும்பத்
தடை



முடக்குத் திரும்பத்
தடை



வாகனம்
முந்திச் செல்லத் தடை



ஒலி எழும்பத்
தடை



வீதி மூடப்பட்டுள்ளது



வசு வண்டிகளுக்கு
வீதி மூடப்பட்டுள்ளது



லொறிகளுக்கு
வீதி மூடப்பட்டுள்ளது



மோட்டார் வாகனங்களுக்கு
வீதி மூடப்பட்டுள்ளது



வாகனங்கள்
நிறுத்தக்கூடாது



வாகனங்கள் நிறுத்தவும்
தரிக்கவும் கூடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுப்படுத்தப்பட்ட சைகைகள்


ஒற்றை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது


இரட்டை நாட்களில் வாகனங்கள்நிறுத்தக் கூடாது



அகலத்தின் வரையறை



உயரத்தின் வரையறை




எடையின் வரையறை



ஓர் அச்சாணி மீது எடையின் வரையறை



வேகத்தின் வரையறை



வேகத்தின் வரையறை முடிவு

## கட்டாயச் சைகைகள்


இடப்பக்கம் திரும்பவும்


வலப்பக்கம் திருப்பவும்


நேராக செல்லவும்


முன்னால் இடப்பக்கம் திருப்பவும்


முன்னால் வலப்பக்கம் திரும்பவும்


இந்தப் பக்கம் திரும்பவும்


கட்டாயச் சுற்றுவட்டம்


வழி விடவும்


முன்னால் வரும் வாகனத்திற்கு முந்துரிமை



முன்னால் வரும் வாகனத்திற்கு மீது முந்துரிமை





நிறுத்துக



பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை


## மேலதிக சட்டங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதசாரிகள் கடவை



ஒரு திசை வழி



வைத்தியசாலை




வாகனம் நிறுத்தும் இடம்



வசுவண்டித் தரிப்பிடம்



துவிச்சக்கர வண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை ஆரம்பம் / தொடர்ச்சி



துவிச்சக்கரவண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை முடிவு



வசுவண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை ஆரம்பம் / தொடர்ச்சி



வசுவண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை முடிவு

## வீதியில் குறியீடு



நடுக்கோட்டு சைகை குறியீடு



குமிழ்கள் (அல்லது பூனைக்கண்கள்) இணைந்த நடுக்கோடு



வலப்பக்கம் திரும்புவதற்குத் தவிர குறுக்கீட்டைத் தடைசெய்யும் நடுக்கோடு



குறுக்கீட்டைத் தடை செய்யும் நெடுங்கோடு




ஒழுங்கைக் குறியீடு



வளைவொன்றில் வண்டிப்பாதையின் ஓரத்தைக் காட்டும் நெடுங்கோடு



வாகனங்கள் நிறுத்தப்படுவதைத் தடை செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் வண்டிப்பாதை ஓரத்தின் குறியீடு




பாதையில் வழிவிடவும் கோடு



சுற்றுவட்டத்தில் வழி விடவும் கோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரிகளினால் கட்டுப்படுத்தப்படும் இடப்பரப்பின் எல்லைகள்




வாகனங்களுக்குக் கட்டாய இடப்பக்கத் திருப்புகையைக் காட்டுவதற்கு



போக்குவரத்து சமிக்ஞைகளில் அல்லது பொலிஸ் கட்டுப்பாட்டில் நிறுத்தக்கோடு



"நிறுத்துக" சைகையில் நிறுத்தக் கோடு



எதிர்திசையிலான வாகனப் போக்குவரத்து



ஒரே திசையிலான வாகனப் போக்குவரத்து




வாகனங்களுக்குக் கட்டாய இடப்பக்கத் திருப்புகையைக் காட்டுவதற்கு




வாகனங்களுக்குக் கட்டாய வலப்பக்கத் திருப்புகையைக் காட்டுவதற்கு



வாகனங்களுக்கு தோதான ஒழுங்கைகளைக் காட்டுவதற்கு




முன்னால் நிகழக்கூடிய அபாயத்தைக் காட்டுவற்கு





நிறுத்துக




வசுவண்டி ஒழுங்கை




துவிச்சக்கரவண்டி ஒழுங்கை




துவிச்சக்கரவண்டி கடவை




அபாய எச்சரிக்கைக் கோடு



வசுவண்டி அல்லது துவிச்சக்கரவண்டி ஒழுங்கை நிர்ணயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்திப் பெட்டி



வழியடைப் பலகை



(அம்புக்குறியானது வீதி மாறுபடும் திசையைக் காட்டும்)
மாற்று வழியடைப் பலகை



சந்திப் பெட்டி

## பாதசாரிகளுக்கான சைகைகள்



சிவப்பு நிற மனிதன்



பச்சை நிற மனிதன்


## தகவல் தரும் சைகைகள், முன்னே நெறிப்படுத்தும் சைகைகள்








## திசை காட்டும் சைகைகள்





இடமும் வகையும்




இடமும் தூரமும்




## உறுதிப்படுத்தும் சைகைகள்





தூரத்தை உறுதிப்படுத்தல்

## இடத்தைக் காட்டும் சைகைகள்




நிர்மாணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றின் ஆரம்பம்




நிர்மாணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றின் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

| | | |
|---|---|---|
| பிறப்பு<br>03<br>◈<br>06<br>◈<br>1938 |  | இறப்பு<br>21<br>◈<br>12<br>◈<br>2015 |

அமரர்

## கந்தப்பு சாவித்திரிதேவி அவர்கள்

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.வி.எம்.நிறுவனத்தின்
வட பிராந்திய முகாமையாளர் கந்தப்பு ராஜசேகரம் அவர்களின்
அன்புத் தாயார் கந்தப்பு சாவித்திரிதேவி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நேசித்த நெஞ்சமெல்லாம்
நிறைதுயருக் கானதுவோ!
இன்முறுவல் காட்டி இனிமையாய்ப் பேசும்
புன்னகைப் பூக்கள் உதிர்ந்தனவோ
நெஞ்சம் கனக்குதம்மா கண்ணீர் நல்குதம்மா
வஞ்சித்த காலனவன் வானுலகுக் கழைத்தானோ
நம்ப முடியவில்லை நடந்த நிகழ்வறிந்தவுடன்...!
பண்பான உன் வார்த்தை
என்று நாம் இனிக்கேட்போம்.

S.V.முருகேசு,
உரிமையாளரும்,
கடை ஊழியர்களும்.

154 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
122, டாம் வீதி, கொழும்பு - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1938
.
06
.
03



மறைவு
2015
.
12
.
21

திருமதி

## சாவித்திரிதேவி கந்தப்பு

நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
எஸ்.வி.எம் நிறுவனத்தின் முகாமையாளர்
கந்தப்பு ராஜசேகரம் அவர்களின் அன்புத்தாயார்
திருமதி சாவித்திரிதேவி கந்தப்பு அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள்
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறி கணேசா ஸ்ரோர்
உரிமையாளர்
480, A-9 றோட், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
03
06
1938



இறப்பு
21
12
2015

அமரர்

## கந்தப்பு சாவித்திரிதேவி அவர்கள்

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.வி.எம்.நிறுவனத்தின்
வட பிராந்திய முகாமையாளர் கந்தப்பு ராஜசேகரம் அவர்களின்
அன்புத் தாயார் கந்தப்பு சாவித்திரிதேவி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திண்ணிய நெஞ்சம் கொண்ட
அன்னையே எம்மைவிட்டு
விண்ணகம் சென்றதேனோ?
விதியினை என்ன செய்வோம்?
எல்லோர் மனங்களிலும்
இடம்பிடித்த நாயகியே
சொல்லாமற் சென்றதென்ன?
சொர்க்கந்தான் அழைத்ததுவா?

சாந்தி சாந்தி சாந்தி


S.V.M.உரிமையாளரும்,
அங்கர் ஊழியர்களும்.

154 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
122, டாம் வீதி, கொழும்பு - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
03.06.1938

உதிர்வு
21.12.2015





## அமரர்
## திருமதி சாவித்திரிதேவி கந்தப்பு

எல்லா மனங்களும் இனிக்கப் பழகி
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
இன்முகம் காட்டி நேசமாய்ப் பழகி
சிரித்த முகத்துடன் என்றும் நல்லவராய்
இன் சொல் பேசி மகிழ்ந்தீரே!

இவ்வுலகில் மங்கா ஒளியாகத் திகழ்ந்த நீர்
பட்டெனப் பாரினில் படுத்துறங்கிச்
சட்டென கண்மூடி எம்மை விட்டு
விண்ணுலகம் சென்றீரோ!

நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
எமது சங்கத்தின் முன்னாள் வர்த்தக முகாமையாளர்
**கந்தப்பு ராஜசேகர்** அவர்களின்
அன்புத்தாயாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ. சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எஸ்.வி.எம். நிறுவனத்தின் வடபிராந்திய
முகாமையாளர்

கந்தப்பு ராஜசேகரம் அவர்களின் அன்புத் தாய்

## திருமதி சாவித்திரிதேவி கந்தப்பு

அவர்களின்

பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ஞானகளஞ்சியம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**

**லக்ஷ்மி களஞ்சியம் -கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.**

(68186)

**உரிமையாளரும், ஊழியர்களும்.** (13.15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி சாவித்திரிதேவி கந்தப்பு



தோற்றம் 03.06.1938 மறைவு 21.12.2015

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட SVM நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் கந்தப்பு ராஜாசேகரம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி சாவித்திரி தேவி கந்தப்பு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜெகன் களஞ்சியம்,
477, K.K.S.றோட்,
யாழ்ப்பாணம்.

(67012)

உரிமையாளரும்
ஊழியர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
கந்தப்பு சந்திரசேகர்
(சேகர் -S.V.M நிறுவனம்)
அவர்களின் அன்புத் தாய்
திருமதி

# சாவித்திரிதேவி கந்தப்பு



21.12.2015 திங்கட்கிழமை
காலமானார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

PST & Fore
(68183)
(13.15) குடும்பத்தினரும், ஊழியர்களும்.

## துயர் பகிர்கின்றோம்

SVM நிறுவனத்தில் கடமையாற்றும் இராஜசேகர் அவரது தாயார் சாவித்திரிதேவி அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

யோகநாதன் (NSM)
Solarze Capital
Lanka (PVT) Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# With the Memory of



Born
1938.03.06

Death
2015.12.21

# KANTHAPPU SAVITHRIDEVI

(Mother of
our Staff Mr. Sivagar)

**Ceylon Agro - Industries Limited**
**(A member of the Prima Group)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன்







**மண்ணில்**
**03.06.1938**

**விண்ணில்**
**21.12.2015**

(எமது சக பணியாளரின் தாயாராகிய)

**அமரர்**

**கந்தப்பு சாவித்திரிதேவி**

**அவர்கள்**


அன்னாரின் பிரிவால் துயருறும்
SUPER SHOES
உரிமையாளர்
பணியாளர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை மீளாத்துயரில் மூழ்க வைத்து மறைந்த எங்கள் அன்பின் குல விளக்காய்த் தோன்றிய அமரர் திருமதி - சாவித்திரிதேவி கந்தப்பு அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரில் வந்து அனுதாபத்தை



தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தியை ஊடகங்களின் மூலம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை பத்திரிகை, சுவரொட்டிகள் மூலம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் சாத்தி கௌரவித்தவர்களுக்கும், பல வகையில் ஒத்தாசை புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட ...

## குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்

அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள் (Loose Talk)

எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக் கொடுங்கள். (Compromise)

சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Tolerance)

எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)

மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)

புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமி பிறின்டர்ஸ் நெல்லியடி - 0214909133